**செ. கு. எண்**: 200 **நாள்**:30.05.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 30.5.2012

25.5.2012 அன்று சென்னை, மெரினா கடற்கரை அருகே உள்ள லேடி வெலிங்டன் பள்ளியில் மரத்தின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காவல் துறை வேனை அதன் ஓட்டுநர் பின்னோக்கி நகர்த்தியதில், மரத்தின் கீழ் படுத்துறங்கிய திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் 6-வது தெருவைச் சேர்ந்த திரு. லோகநாதன் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் அகால மரணமடைந்த லோகநாதன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இவ்விபத்தில் காலமான திரு. லோகநாதன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இச் சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டு, கவனக் குறைவாக வாகனத்தை இயக்கி, விபத்து ஏற்படுத்திய, காவல் துறை ஓட்டுநர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**